அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# பொதுத்தேர்வு மாதிரித்தேர்வுத்தாள்

# தமிழ்

# ஆண்டு 10

| | |
|---|---|
| **நேரம்: 180 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்: 16** |
| **சுட்டெண்:** 10-82821 | |

# பகுதி – 1

**1. மிகப் பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1. ‘அவை புகழ் அரங்கின் மேல் ஆடுவாள்’ எனும் பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்
   1. ☐ வளையாபதி
   2. ☐ கலித்தொகை
   3. ☐ மணிமேகலை
   4. ☐ குறுந்தொகை

2. தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாக வரும்சொல்
   1. ☐ மரம்
   2. ☐ வா
   3. ☐ வேங்கை
   4. ☐ யானை

3. 1610 நூற்பாக்களைக் கொண்ட மிகப்பழைமையான இலக்கணநூல்
   1. ☐ நன்னூல்
   2. ☐ தொல்காப்பியம்
   3. ☐ வீரசோழியம்
   4. ☐ தண்டியலங்காரம்

4. பால் காட்டும் பகுசொல் உறுப்பு
   1. ☐ பகுதி
   2. ☐ விகுதி
   3. ☐ இடைநிலை
   4. ☐ சாரியை

5. கிழமை, நிலவு, மாதம் எனப் பலபொருள் தரும் ஒரு சொல்
   1. ☐ வாரம்
   2. ☐ சந்திரன்
   3. ☐ மதி
   4. ☐ திங்கள்

6. ஏட்டுச்சுரைக்காய் எனும் மரபுத்தொடர் குறிப்பது
   1. ☐ பட்டறிவற்ற நூலறிவு
   2. ☐ மனதை அளவிடுதல்
   3. ☐ காலந்தாழ்த்துதல்
   4. ☐ மிகுந்த செலவாளி

7. வளவன் செய்த தவறுகளை எழிலன் திருத்தினான். இதில் திருத்தினான் என்பதன் தன்வினை வடிவம்

1. ☐ திருந்தினான்
2. ☐ திருத்துவித்தான்
3. ☐ திருத்துவான்
4. ☐ திருத்தப்பட்டது

8. தமிழ்நாட்டில் சோழர்கள் எட்டாம் நூற்றாண்டுக்குப் பின் பேரரசர்களாகத் திகழ்ந்தனர். இதில் பேரரசு என்பதன் எதிர்ப்பொருட்சொல்

1. ☐ பெரிய அரசு
2. ☐ சிற்றரசு
3. ☐ குடியரசு
4. ☐ வல்லரசு

9. இளமையிற் கற்கும் கல்வி அழியாத தன்மையுடையது. அழியாத தன்மை என்பதற்குப் பொருத்தமான உவமைத்தொடர்

1. ☐ அத்தி பூத்தாற் போல
2. ☐ கண்ணை இமைகாப்பது போல
3. ☐ கல்மேல் எழுத்துப் போல
4. ☐ அச்சில் வார்த்தாற் போல

10. விம்மிவிம்மி அழுத சிறுவர்களை ஈவு இரக்கம் இன்றிப் படையினர் கொன்றனர். இதில் ஈவு இரக்கம் என்பது

1. ☐ அடுக்குமொழி
2. ☐ இணைமொழி
3. ☐ அடுக்கிடுக்குமொழி
4. ☐ இரட்டைக்கிளவி

11. மானின் ஆண் கலை போல மாட்டின் ஆண்

1. ☐ கடா
2. ☐ எருது
3. ☐ பசு
4. ☐ குண்டு

12. மக்கள் கூட்டம் மன்னனுக்கு வாழ்த்துக் கூறினர். இதில் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் பெற்று வந்துள்ள சொல்

1. ☐ மக்கள்
2. ☐ மன்னன்
3. ☐ வாழ்த்து
4. ☐ கூட்டம்

13. ஓரிடத்தில் சொல்லத் தகாத சொற்களைத் தகுதியான சொற்களைப் பயன்படுத்திச் சொல்லும் வழக்கு

1. ☐ மங்கலம்
2. ☐ இடக்கரடக்கல்
3. ☐ மரூஉ
4. ☐ குழூஉக்குறி

14. செம்பூங் கண்ணியொடு அணி மயிற்பீலி சூட்டி... இதில் கண்ணி என்பது

1. ☐ வெடி
2. ☐ மாலை
3. ☐ அம்பு
4. ☐ பூ

15. பொற்றோடு என்பதன் சொற்பிரிப்பு வடிவம்

1. ☐ பொன் + தோடு
2. ☐ பொற் + தோடு
3. ☐ பொற் + றோடு
4. ☐ பொண் + தோடு

16. மொழியின் இறுதியில் வராத எழுத்துகள்

1. ☐ இடையினமெய்
2. ☐ வல்லினமெய்
3. ☐ உயிர்க்குறில்
4. ☐ உயிர்நெடில்

17. கலைகளைக் கற்றுத் தேர்ந்த மாணவர் மக்கள் முன்னிலையில் அக்கலையை முதன்முதலில் நிகழ்த்திக் காட்டுவது

1. ☐ வெள்ளோட்டம்
2. ☐ வெளியீடு
3. ☐ அரங்கேற்றம்
4. ☐ முன்னோட்டம்

18. சொற்களஞ்சிய அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட சொற்கள்

1. ☐ பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்
2. ☐ எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், அடைமொழி
3. ☐ இயற்சொல், திரிசொல், வடசொல், திசைச்சொல்
4. ☐ தெரிநிலைவினை, குறிப்புவினை, முற்றுவினை, எச்சவினை

19. நெல்லுக்குக் குவியல் போல வைக்கோலுக்கு

1. ☐ கொத்து
2. ☐ கற்றை
3. ☐ வரிசை
4. ☐ திரள்

20. ஒருமை + அறிவு என்பதன் சொற்புணர்ச்சி வடிவம்

1. ☐ ஒருமைஅறிவு
2. ☐ ஓரறிவு
3. ☐ ஒருஅறிவு
4. ☐ ஓர்அறிவு

21. எல்லாளன் நீதி தவறாத தமிழ்மன்னன். இதில் தவறாத என்பது

1. ☐ பெயரெச்சம்
2. ☐ எதிர்மறைவினையெச்சம்
3. ☐ வினையெச்சம்
4. ☐ எதிர்மறைப்பெயரெச்சம்

22. மருத நிலத்துக்குரிய உரிப்பொருளாக அமைவது

1. ☐ புணர்தல்
2. ☐ இருத்தல்
3. ☐ இரங்கல்
4. ☐ ஊடல்

23. வடமொழி இலக்கியமான மகாபாரதத்தை தமிழில் எழுதியவர்

1. ☐ கம்பர்
2. ☐ சேக்கிழார்
3. ☐ சிறிவில்லிபுத்தூர் ஆழ்வார்
4. ☐ இளங்கோ அடிகள்

24. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மக்களிடையே சிறந்த ஊடகமாக வானொலி விளங்கியது. இதில் வானொலி என்பது

1. ☐ இடுகுறிப்பெயர்
2. ☐ காரணப்பெயர்
3. ☐ காரண இடுகுறிப்பெயர்
4. ☐ இடுகுறிப்பொதுப்பெயர்

25. மேம்போக்காக நிறையத் தெரிந்து கொள்வதைவிட ஒரு துறை சார்ந்த நுட்பமான அறிவைப் பெறுவது சிறந்தது. இக்கருத்தை விளக்கும் பழமொழி

1. ☐ மழைக்கால இருட்டானாலும் மந்தி கொப்பிழக்கப்பாயாது
2. ☐ சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்
3. ☐ அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல்
4. ☐ மடியிலே கனம் இல்லையென்றால் வழியிலே பயமில்லை

(25×1=25 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் வினாக்களுள் நீங்கள் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தொல்காப்பியத்தின் சிறப்புகளுள் இரண்டு எழுதுக.

_______________________________________________

_______________________________________________

2. உருபு ஏற்காத வேற்றுமைகள் எவை? அவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

_______________________________________________

_______________________________________________

3. அன்று தொடக்கம் இன்று வரை பல இன மக்களிடையே புலப்பெயர்வு நடைபெறுவதற்கான காரணங்கள் இரண்டு எழுதுக.

_______________________________________________

_______________________________________________

4. அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப்பொருள்களை முறையாகக் கூறும் இலக்கியங்களை எவ்வாறு அழைப்பர்? அவற்றுள் இரண்டின் பெயர்களை எழுதுக.

_______________________________________________

_______________________________________________

5. தேவார திருவாசகங்கள் இராசராசசோழனால் தொகுப்பிக்கப்பட்டது. இச்சொல்லியத்தைச் செய்வினைச் சொல்லியமாக மாற்றி எழுதுக.

_______________________________________________

_______________________________________________

6. அணி என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரச் சொல்லியங்கள் எழுதுக.

பெயர்: _______________________________________________

வினை: _______________________________________________

7. 'இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு' இக்குறளின் பொருளை எழுதுக.

_______________________________________________

_______________________________________________

(5X2=10 புள்ளிகள்)

**3. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

ஊரான ஊரிழந்தேன்
ஒத்தப் பனைத் தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்த தாயை நாமறந்தேன்
பாதையிலே வீடிருக்க
பழனிச் சம்பா சோறிருக்க
எருமைத் தயிரிருக்க
ஏன்டி வந்தோம் கண்டிச்சீமை
எண்ணிக் குழிவெட்டி
இடுப்பொடிஞ்சி நிக்கையிலே
வெட்டு வெட்டு எங்கிறானே
வேலையத்த கங்காணி
தோட்டம் பிரளியில்லே
தொரெ மேலே குத்தமில்லே
கங்காணி மாராலே
கனபிரளி யாகுதையா

1. இப்பாடலில் மேலோங்கிக் காணப்படும் உணர்வு யாது?

_______________________________________________

2. தோட்டத் தொழிலாளர்களை வேலை வாங்குபவர் யார்?

_______________________________________________

3. சொந்த ஊரைவிட்டுத் தொழில் நிமித்தம் தோட்டத் தொழிலாளர்கள் வந்த இடம் எது?

_______________________________________________

(3X1=3 புள்ளிகள்)

**4. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து ஆறு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. 

2. காந்தள் மலர்

______________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

(4 புள்ளிகள்)

**5. பந்தியைப் படித்து, அதன் மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

கலையின் வடிவம் என்றால் ஒருமுகமாக இயையும் முழுமை என்றே கூறவேண்டும். இந்நிலையில் கவிதைக்கலையில் தனிப்பாடல் என்றாலும் உணர்ச்சி, கற்பனை, ஒலிநயம் இயைந்து அமையவேண்டும். காவியம் எனில் கதை நிகழ்ச்சிகள் எல்லாம் அதனையே நோக்கி அமைதல் வேண்டும். நாடகம் எனில் ஒரு சுவை மேலோங்க மற்றவை பின்னணியில் நிற்கவேண்டும். இதனால், மற்ற கலைகளை விட இலக்கியக் கலைக்கே வடிவம் மிகவும் தேவை. “பொருளும் வடிவமும் அமைந்து நிற்கும் தன்மையை ஒட்டியே பாட்டின் உயர்வு உள்ளது” என்கிறார் பிராட்லி. இவ்வாறு மாந்தன் மொழியோடு தொடர்புடையதாய் மாந்த சிந்தனைக்கும் உணர்வுக்கும் கற்பனைக்கும் மிகுந்ததாக அமைகின்ற இலக்கியங்களுள் கவிதைக் கலையே கலைகளின் அரசியாகத் திகழுகிறது. மாந்தர் பலரும் கூடிய குமுகாய வாழ்க்கை ஏற்பட்ட பின்னரே கவிதை தோன்றியிருக்கவேண்டும். சிலப்பதிகாரம் காட்டும் குரவைக் கூத்துப்பாடல்கள் இதற்குச் சிறந்த சான்று ஆகும்.

(4 புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து, அதனைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.**

(4 புள்ளிகள்)

**7. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தொல்காப்பியம்
2. புலம்பெயர் நாடுகளில் இளையோரும் தலைமுறை இடைவெளியும்
3. தொழிற்கல்வியின் சிறப்பு

   உள்ளடக்கக் குறிப்புகள்:
   - தொழிற்கல்வி நடைமுறை
   - தொழிற்கல்வியின் அகத்தியம்
   - தொழிற்கல்வியும் வேலைவாய்ப்பும

(15 புள்ளிகள்)

## பகுதி – 2

**1. பந்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

இருபதாம் நூற்றாண்டின் முடிவில்தான் ஐரோப்பிய நாடகங்களின் தொடர்பால் தமிழில் குமுகாய நாடகங்கள் தோன்றி வளரலாயின. சேக்சுபியரின் நாடகங்களைப் போல் ஐந்து உறுப்புகளாகவும் சிற்சில காட்சிகளாகவும் நாடகம் எழுதும் முறை பரவியது. மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை எழுதிய 'மனோன்மணீயம்' என்னும் நாடகம் அவ்வாறு அமைந்ததே. ஆயினும், அது பெரும்பாலும் படிப்பதற்கு உரிய நாடகமாக செய்யுள் வடிவில் அமைந்துள்ளது. பரிதிமாற்கலைஞர் இயற்றிய ரூபாவதி, கலாவதி, மானவி செயம் முதலிய நாடகங்களும் அத்தகையனவே. நடிப்பதற்கு உரிய நாடகங்கள் பலவற்றை உரைநடையில் எழுதி, ஆக்கித் தந்தவர் பம்பல் சம்பந்தமுதலியார். அவருடைய நாடகங்களில் மாந்தரின் பண்புகள் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. அவர் நாடக ஆசிரியராக மட்டும் அல்லாமல் நடத்துவோராகவும் நடிப்பவராகவும் விளங்கித் தொண்டுபுரிந்த காரணத்தால், தமிழ் நாடகமேடையைப் பெரிதும் சீர்படுத்தமுடிந்தது. காம்லெத் முதலான ஆங்கில நாடகங்களும் மண்ணியல் சிறுதேர், சாகுந்தலம் முதலான வடமொழி நாடகங்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அவை படிப்பதற்கு உரிய நாடகங்களாக அமைந்துள்ளன.

1. நாடகங்களை உரைநடையில் எழுதி, ஆக்கித் தந்தவர் யார்? (1 புள்ளி)

______________________________

2. தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நாடகங்கள் எவை? (2 புள்ளிகள்)

______________________________

3. மனோன்மணீயம் என்னும் செய்யுள் நாடகம் யாருடைய நாடகங்களைப் போல் அமைந்துள்ளது? (1 புள்ளி)

______________________________

4. பரிதிமாற்கலைஞர் எழுதிய நாடகங்கள் எவை? (2 புள்ளிகள்)

______________________________

5. பம்பல் சம்பந்தமுதலியார் தமிழ்நாடக மேடையைச் சீர்படுத்தக் காரணமாக அமைந்தவை எவை? (2 புள்ளிகள்)

______________________________

6. தமிழில் குமுகாய நாடகங்கள் தோன்றக் காரணமாக அமைந்தது எது? (1 புள்ளி)

______________________________

7. மனோன்மணீயம் என்ற நாடகத்தை எழுதியவர் யார்? (1 புள்ளி)

______________________________

(10 புள்ளிகள்)

**2. விளம்பரத்தைப் படித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் எழுதுக.**

**சாரணியத்தின் தந்தை பேடன்பவல் பிரபுவின்**

166 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு






உயிர்காக்கும் உயரியபணி

**குருதிக்கொடை 2023**

**"நாள் ஒரு நற்செயல் செய்வோம்"**



**நாள் : 22. 02. 2023 நேரம் : 09 : 00**

**இடம் : சுவிஸ் சாரணியர் சங்க மண்டபம், யெனிவா**

கணப்பொழுதும் காத்திரு!

குருதியைக் கொடுத்திடு! பல உயிர் காத்திடு!

**ஒழுங்கமைப்பு: குருளைச் சாரணர் சங்கம், திரி சாரணியர் சங்கம் சுவிற்சர்லாந்து**

1. இப்பணி சுவிற்சர்லாந்தில் நடைபெறுகிறது. ( )

2. உயிர்காக்கும் பணிகளுள் குருதிக்கொடையும் ஒன்று. ( )

3. பேடன்பவல் பிரபுவின் 166ஆவது பிறந்தநாளை முன்னிட்டுக் குருதிக்கொடை நடைபெறுகிறது. ( )

4. பேடன் பவல் பிரபு அவர்கள் சாரணியத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார். ( )

5. திரிசாரணர் சங்கம் மட்டும் இப்பணியை ஒழுங்கமைத்துள்ளது. ( )

(5X1=5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 03 | | | |
| 4 | 04 | | | |
| 5 | 04 | | | |
| 6 | 04 | | | |
| 7 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |